2010 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் மூலமாகப் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2008 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, கறம்பக்குடி ஆகிய 2 வட்டங்களை அறிவித்தார்; நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதற்கான அலுவலகங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் வந்து திறந்து வைத்தார்கள். அந்தக் கட்டடங்களையும் விரைவாகக் கட்டித் தர வேண்டி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நீண்ட காலமாகப் பட்டா கிடைக்காமல் இருந்தது. இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது நான் பேசிய பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பட்டாவை வழங்குவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்மூலமாக உத்தரவிட்டு, அந்தப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கும் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

175—

பத்திரப் பதிவு அலுவலகம்

***54471—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், குன்னத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 மே 12

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

குன்னம் கிராமம், குன்னம் வட்டத்தில் அமைந்துள்ளது. இதன் சார் பதிவக ஆட்சி வரம்பு வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வருகின்றது. வேப்பூர் சார் பதிவகம் 14 கிராமங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணப் பதிவு மிகக் குறைவாக இருந்த காரணத்தால், புதிதாக ஆரம்பிக்கக்கூடிய எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதியில் 72 ஊராட்சிகளையும், லப்பைக்குடிக்காடு பேரூராட்சியையும் உள்ளடக்கியது குன்னம் வட்டாட்சியர் அலுவலகம். குன்னத்தில் சுகாதார நிலையம், கால்நடை மருந்தகம், காவல் நிலையம், வங்கிகள், பள்ளிகள், விடுதிகள் செயல்படுவதால், சுற்றுப்புற கிராமப் பகுதியில் இருந்து குன்னத்திற்கு எளிதாக வந்து செல்கிற ஒரு முக்கிய இடமாகும். இந்த நிலையில், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வரகூர் தொகுதி மக்களின் 28 வருவாய்க் கிராமங்கள் 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரியலூர் மாவட்டத்திலும், 3 கிராமங்கள் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெரம்பலூரிலும், 12 கிராமங்கள் 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வாலிகண்டபுரத்திலும் சென்று தங்கள் சொத்துக்களைப் பத்திரப் பதிவு செய்துகொள்ள வேண்டிய நிலை உள்ளதால் அவதிப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், எங்கள் தொகுதி மக்கள் சிரமப்பட்டு வருகின்றார்கள். குன்னம் வட்டாட்சியர் அலுவலகம் 8 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. அதன் அருகில் 4 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. குன்னம் காவல் நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் இலவசமாக இடம் கொடுத்த ஊராட்சித் தலைவர் திரு. இளங்கோவன் அவர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் இடம் தருவதற்குத் தயாராக உள்ளனர். எனவே, இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, குன்னத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமர்கின்றேன்.

2010 மே 12]

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று சொன்னால், சுமார் 2,000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே இருக்கக்கூடிய வேம்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2,000 ஆவணங்கள்தான் பதிவு செய்யப்படுகின்றன. எனவே இதைப் பிரிக்கின்றபோது, மீண்டும் அதில் ஏற்கெனவே இருக்கக்கூடிய வேம்பூர் சார் பதிவாளர் அலுவலகம் பாதிக்கப்படும். எனவே, வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வது வேம்பூர் அல்ல, வேப்பூர். ஒரு சில கிராமங்களை உள்ளடக்கியது வேப்பூர். ஆனால் வரகூர் தொகுதிக்குப்பட்ட குன்னத்தின் அருகே உள்ள கிராமங்களில் உள்ளவர்கள் அனைவரும் அரியலூருக்கும், பெரம்பலூருக்கும் சென்று பத்திரப் பதிவு செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் எங்களது தொகுதி மக்கள், தொகுதியினுடைய மையப் பகுதியை விட்டுவிட்டு, நான்கு புறத்திலும் சென்று தங்களுடைய பத்திரங்களைப் பதிவு செய்யக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்களினுடைய போக்குவரத்து வசதியையும் கருத்திற்கொண்டு, அவர்களின் பண விரயத்தையும் கருத்திற்கொண்டு, அங்கு வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது, அங்கேயே பத்திரப் பதிவு செய்து கொண்டால், அங்கே வருகின்ற பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். எனவே, குன்னத்திலே பத்திரப் பதிவு அலுவலகம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், வரகூர் தொகுதியிலுள்ள வேப்பூர் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன். மேலும், கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை பத்திரப் பதிவு அலுவலகங்கள்

தொடங்கப்பட்டன? அவற்றில் எத்தனை அலுவலகங்களுக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித் தரப்பட்டது? தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்ற பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் குறைவான ஆவணங்களே பதிவு செய்யப்படுகின்ற காரணத்தினால், அதைப் பிரிப்பதற்கான வாய்ப்பே இல்லை. வருங்காலத்தில் அங்கு ஆவணப் பதிவுகள் கூடுகின்றபோதுதான் பிரிக்கக்கூடிய முயற்சியில் இந்த அரசு ஈடுபடும். அதுமட்டுமல்லாமல், வாடகைக் கட்டடத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 50 சதவிகித அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் வாடகையாக அரசு செலவு செய்து வருகிறது. கடந்த 4 ஆண்டு காலமாக 45 சார் பதிவாளர் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

176—

குடும்ப அட்டை

***122976—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*